<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXV of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

S.T.C.No. 80/2020 LW- 9 PW- 7

| | |
|---|---|
| Name | : குமரேசன் (நிபுணர் சாட்சி) |
| Father's/Husband's Name | : கருப்பையா |
| Village | : ஊமச்சிகுளம் |
| Taluk | : திருமால்புரம் |
| District | : மதுரை |
| Age | : 63/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of February 2026

( 1, 2 எதிரிகள் ஆஜர், எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் செந்துறை சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 2017ம் ஆண்டு முதல் 2020ம் ஆண்டு வரை மேற்கண்ட அலுவலகத்தில் பணியில் இருந்தபோது கடந்த 03.03.2020ம் தேதி நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்னிடம் மனு செய்து கேட்டதன் பேரில் கீழ்க்கண்ட 2 ஆவணங்களின் சான்றிட்ட நகல்களையும், பெருவிரல் பதிவுகளின் சான்றிட்ட நகல்களையும், மற்றும் வில்லங்க சான்றையும் வழங்கினேன்.

1. ஆவண எண்.150/2004 – சீனிசெட்டியார் மனைவி ராஜம்மாள் என்பவர் மைனர்களான வேலவேந்தன் மற்றும் போகர்சாமி ஆகிய இருவருக்கும் கார்டியனாக இருந்து சீனிசெட்டியார் மகன் கணேசன் (A1) என்பவருக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார்கள். அந்த சொத்தானது செந்துறை கிராம சர்வே எண்.312/1B2வில் கண்ட 1 ஏக்கர் 59 செண்டில் தென்புறத்தின் நடுப்புறம் செண்ட் 12ல் வடபுறம் செண்ட் 6 என்பதை ரூ.39,240/–க்கு கிரையம் கொடுத்துள்ளார்கள். அந்த பதிவு சம்பந்தமான வில்லங்க சான்று மற்றும் கிரைய ஆவணத்திற்கு ராஜம்மாள் என்பவர் வைத்த பெருவிரல் ரேகை பதிவு அடங்கிய சான்றிட்ட நகல் (2) ஆகியவற்றை இணைத்து சார்பு ஆய்வாளரிடம் கொடுத்துள்ளேன்.

2. ஆவண எண்.39/1990 – சீனிசெட்டியார் மகன் போஸ் என்பவருக்கு சேவியர் மகன் சார்லஸ் என்பவர் 03.07.1990ம் தேதி கிரைய ஆவணமாக எழுதிக் கொடுத்துள்ளார். அந்த சொத்தானது செந்துறை கிராமம் சர்வே எண்.312/1B2வில் 6 செண்ட் இடத்தினை ரூ.4,000/–க்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார். அதன் சான்றிட்ட நகலை சார்பு ஆய்வாளரிடம் நான் கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணங்களை வழக்கு விசாரணைக்கு உதவியாக அலுவலக குறிப்பாணை எண்.49/2020, நாள் : 03.03.2020ன்படி அனுப்பி வைத்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

3) 03.03.2020ம் தேதிய ந.க.எண்.49/2020 ஆனது என்னால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி குறிப்பாணையின்படி 25.03.2004ம் தேதி ஆவண எண்.150/2004 ஆவணம் 1வது எதிரி கிரையம் பெற்ற ஆவணம் உண்மையானது என்று சான்று அளித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கிரைய ஆவணத்தை பதிவு செய்யும் போது பதிவு சட்ட விதிமுறைகள் மீறப்படவில்லை என்றால் சரிதான். போஸ் இறப்பு சான்று மற்றும் அவருடைய மனைவி ஜோதிலெட்சுமி இறப்பு சான்று ஆகியவை கிரைய ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளது என்றால் இல்லை, அவற்றை நான் கொடுக்கவில்லை, தனியாக மனு செய்து பெறப்பட்டுள்ளது. மேற்படி ந.க.எண்.49/2020 உடன் இணைக்கப்பட்டுள்ள ஓ.மு.எண்.4158/ஆ3/2019 என்ற நடவடிக்கையில் மாவட்ட பதிவாளர், திண்டுக்கல் 29.10.2019ம் தேதி வழங்கிய குறிப்பாணை என்றால் சரிதான். அதில் அ.சா.1 வேலவேந்தன் என்பவர் அளித்த புகாரின் அடிப்படையில் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் ஆவண எண்.150/2004 ஆவணப்பதிவில் ஆள்மாறாட்டமோ, போலி ஆவண பதிவோ நிகழவில்லை என்றும், ஒரே குடும்பத்திற்குள் நடைபெற்றுள்ள உரிமையியல் பிரச்சனை என தெரியவருகிறது என்றும், உரிய உரிமையியல் நீதிமன்றத்தை நாடி பரிகாரம் தேடிக் கொள்ளவும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.10 22:43:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்